**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
*Ang Mo Kio Tamil Methodist Church*

*19th ஜூலை / July 2026 ஞா யிறு ஆராதனை / Sunday Service*

## Mission Sunday

| | |
|---|---|
| ✝ **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திருமதி. ஹென்சி மெல்பின்**<br>Mrs. Hency Melbin |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| **ஜெபம்**<br>Prayer | **திருமதி. ஹென்சி மெல்பின்**<br>Mrs. Hency Melbin |
| ✝ **தொடக்க பாடல்**<br>Opening Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**சத்தியவேதமான விதை காலை மாலை**

*1. சத்தியவேதமான விதை காலை மாலை*
*விதைப்போம் எப்போதும் ஓய்வில்லாமலே*
*அறுப்பின் நற்காலம் எதிர் நோக்குவோமே*
*சேருவோம் எல்லோரும் அரிக்கட்டோடே*

**அரிக்கட்டோடே அரிக்கட்டோடே**
**சேருவோம் எல்லோரும் அரிக்கட்டோடே**

*2. மழையடித்தாலும், வெயிலெரிந்தாலும்*
*குளிர்ச்சியானாலும், வேலை செய்வோமே*
*நல்ல பலன் காண்போம், துன்பம் மாறிப்போகும்*
*சேருவோம் எல்லோரும் அரிக்கட்டோடே*

*3. கவலை, விசாரம் கஷ்ட நஷ்டத்தோடும்*
*விதைத்தாலும் வேலை விடமாட்டோமே*
*இளைப்பாற கர்த்தர் நம்மை வாழ்த்திச் சேர்ப்பார்*
*சேருவோம் எல்லோரும் அரிக்கட்டோடே*

| | |
|---|---|
| ✝ **மாறி வாசித்தல் 29ம் ஞாயிறு**<br>**"சங்கீதம் 93"** | **சபையார் இணைந்து**<br>Congregation |

**"கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார்"**

**Psalter Reading "Psalm 93"**

| | |
|---|---|
| ✝ **தந்தை போற்றி**<br>Gloria Patri | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **துதி ஆராதனை**<br>Singspiration | |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**<br>Thanksgiving & Pastoral Prayer | |
| **பரமண்டல ஜெபம்**<br>Lord's Prayer | **சபையார் இணைந்து**<br>Congregation |
| ✝ **காணிக்கை பாடல்**<br>Offertory Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**தாசரே, இத்தாரணியை அன்பாய்**

**தாசரே, இத்தாரணியை அன்பாய்**
**யேசுவுக்குச் சொந்தமாக்குவோம்.**

**நேசமாய் யேசுவைக் கூறுவோம், அவரைக்**
**காண்பிப்போம், மாவிருள் நீக்குவோம்,**
**வெளிச்சம் வீசுவோம்**

*1. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்தோரை,*
*வருந்தியன்பாய் அழைத்திடுவோம்,*
*உரித்தாய் யேசு பாவப் பாரத்தை*
*நமது துக்கத்தை, நமது துன்பத்தைச் சுமந்து தீர்த்தாரே. – தாச*

*2, பசியுற்றோர்க்குப் பிணியாளிகட்குப்*
*பட்சமாக உதவி செய்வோம்;*
*உசித நன்மைகள் நிறைந்து, தமை மறந்து,*
*யேசு கனிந்து, திரிந்தனரே. - தாச*

*3. நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை*
*நீசரை நாம் உயர்த்திடுவோம்;*
*பொறுக்கவொண்ணா கஷ்டத்துக்குள்,*
*நிஷ்டூரத்துக்குள், படுகுழிக்குள் விழுந்தனரே, - தாச*

*4. இந்த தேச மாது சிரோமணிகள்*
*விந்தை யொளிக்குள் வரவழைப்போம்;*
*சுந்தர குணங்களடைந்து, அறிவிலுயர்ந்து,*
*நிர்ப்பந்தங்கள் தீர்ந்து, சிறந்திலங்கிட. – தாச*

*5. மார்க்கம்தப்பி நடப்போரைச் சத்ய*
*வழிக்குள் வந்திடச் சேர்த்திடுவோம்*
*ஊக்கமாக ஜெபித்திடுவோம், நாமுயன்றிடுவோம்,*

நாம் உழைத்திடுவோம், நாம்
ஜெயித்திடுவோம் – தாச

✝ **பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
Doxology — Congregation

✝ **திருமறைப் பாடம்** — **திரு. மகேஸ்வரன்**
Scripture Reading — Mr. Mageshwaran
***லூக்கா 10 : 1 - 2***
Luke 10 : 1 - 2

**அருளுரை** — **மறைதிரு. வின்செண்ட் லிம்**
Sermon — Rev. Vincent Lim (MMS)

✝ **அர்ப்பணகீதம்** — **சபையார் இணைந்து**
Offertory & Closing Song — Congregation

**<u>இருள் சூழும் காலம் இனி வருதே</u>**

*1.* இருள் சூழும் காலம் இனி வருதே
அருள் உள்ள நாட்கள் பயன்படுத்தும்
திறவுண்ட வாசல் அடைபடுமுன்
நொறுங்குண்ட மனதாய் முன்செல்வார் யார்?

**திறவுண்ட வாசல் அடைபடும்முன்**
**நொறுங்குண்ட மனதாய் முனசெல்வார் யார்?**
**நாட்கள் கொடியதாய் மாறிடுதே**
**காலத்தை ஆதாயம் செய்திடுவோம்**

*2.* தரிசு நிலங்கள் அநேகம் உண்டு
தரிசனம் பெற்றோர் நீர்முன் வருவீர்
பரிசாக இயேசுவை அவர்களுக்கும்
அளித்திட அன்பினால் எழுந்து செல்வீர்

*3.* எத்தனை நாடுகள் இந்நாட்களில்
கர்த்தனின் பணிக்குத்தான் கதவடைத்தார்
திறந்த வாசல் இன்று உனக்கெதிரில்
பயன்படுத்தும் மக்கள் ஞானவான்கள்

*4.* விசுவாசிகள் எனும் கூட்டம் உண்டு
அன்பு ஒன்றே அவர் நடுவில் உண்டு
ஒருமனம், ஒற்றுமை அங்கு உண்டு
என்று சொல்லும் நாட்கள் இன்று வேண்டும்

*5.* இனிவரும் நாட்களில் நமது கடன்
வெகு அதிகம் விசுவாசிகளே
நம்மிடை உள்ள ஐக்கியமே
வெற்றியும் தோல்வியும் ஆக்கிடுமே

*6.* இயேசுவே எங்கள் உள்ளங்களை
அன்பெனும் ஆவியால் நிறைத்திடுமே
சிங்கையின் எல்லாத் தெருக்களிலும்
இயேசுவின் நாமமும் விரைந்திடுமே.

**அறிவிப்புகள்**
Announcements

## Missions Presentation

✝ **<u>மனப்பாட வசனம்</u>** — **சபையார் இணைந்து**
<u>Memory Verse</u> — Congregation

***யாக்கோபு 5 : 16***
James 5 : 16

***16. நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.***

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்**
Closing Prayer & Benediction

✝ **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

✝ **சபையார் நிற்கவும் ⁄ Indicates Congregation standing**